Registered as a Newspaper

மாணவர்களுக்காக!
எமது நிறுவனம்
241, நாவலர் வீதியில்
(புகையிரதக் கடவைக்கு அருகில்)
New Master
INSTITUTE
Jaffna.
Monday & Saturday
திங்கள், சனி

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை: ரூ. 1-25

வழமையான நேர அட்டவணையில்
சகல வகுப்புக்களும்
ஒழுங்காக
நடைபெறுகின்றன
(எமது வழமையான ஆசிரியர் குழுவினரால்)
New Master
INSTITUTE
241, Navalar Road,
Jaffna.
Monday & Saturday

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு வைகாசி மாதம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ரம்ழான் பிறை 26 (25.05.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி 152

# ஆனையிறவிலிருந்து முன்னேற இராணுவம் பெரும் பிரயத்தனம்

## கடும் வானத் தாக்குதல் மத்தியிலும் போராளிகள் தடுத்து முறியடித்தனர்

— அலுவலகச் செய்தியாளர்: க. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், மே 25

ஆனையிறவு முகாமிலிருந்து குடாநாட்டுப் பக்கமாக முன்னேறி வருவதற்கு இராணுவத்தினர் நேற்றும் பெரும் பிரயத்தனம் செய்தனர்.

பொம்மர்களில் இருந்து குண்டு வீசியும், அவ்ரோவில் இருந்து எரிகுண்டு, பீப்பாய் குண்டுகள் வீசியும், ஹெலியிலிருந்து சுட்டும் பெரும் வானத் தாக்குதல்களை நடத்திப் போராளிகளை நிலைகுலையச் செய்ய முயன்றனர்.

ஆனால் போராளிகள் விட்டுக்கொடுக்கவில்லை. படையினரின் கடும் வான, தரைத் தாக்குதல்களுக்கு நின்று பிடித்து சுமார் ஆறு மணி நேரமாக உக்கிரமாகப் போர் புரிந்து இராணுவத்தினரின் முன்னேற்ற முயற்சியை வெற்றிகரமாக முறியடித்தனர்.

கடும் தாக்குதலை நடத்திய போதிலும் இராணுவத்தினரால் வழமையாக வந்து செல்லும் புளியமரத்தடிக்கு இப்பக்கமாக வர முடியவில்லை.

இச்சம்பவம் குறித்து அறியப்படுவதாவது:-

நேற்றுக் காலை எட்டு மணியளவில் மூன்று பொம்மர் விமானங்கள், இரண்டு ஹெலிக்கொப்டர்கள், அவ்ரோ விமானம் ஒன்று ஆகியன ஆனையிறவுப் பகுதியைச் சுற்றி வட்டமிட்டன.

அவ்வேளை ஆனையிறவு முகாமிலிருந்து நூற்றுக் கணக்கான சிப்பாய்கள் வானப் பாதுகாப்புடன் வெளியே வந்தனர்.

சிப்பாய்கள் வெளியே வந்ததும், பொம்மர் விமானங்கள் போராளிகளின் காவல் அரண்கள் மீது சரமாரியாகக் குண்டுகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)




கடலில் இருந்தும் மேலதிகமாய் தாக்கப் போகினமாம். ஆக உள்ள மக்களைப் பாதிக்காமல் தாக்கிறதாயும் கதை விடுகினம் பாதிபேர...!

## நகரில் ஷெல் தாக்கு

### 2 பேர் காயம்; கடைகள் சேதம்

யாழ்ப்பாணம், மே 25

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் இருவர் காயமடைந்தனர். சில கடைகள் சேதமுற்றன.

நேற்றுக் காலை 11 மணியளவில் ஆரம்பமான ஷெல் தாக்குதல்கள் மாலைவரை விட்டு விட்டு நீடித்தன.

சத்திரத்துச் சந்தி, கொட்டடி - சிவன் பண்ணை வீதிச் சந்தி, நாவலப் பகுதி ஆகியவற்றில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன. (உ-10)

## தமிழக மதற்றநிலை குறித்து ஜே. ஆருக்கு தொண்டா விளக்குவார்

கொழும்பு, மே 25

தமிழர் மீதான இராணுவ நடவடிக்கைகளை இலங்கை அரசு தொடர்ந்து நடத்துவது குறித்து தமிழ்நாட்டில் புதிதாக எழுந்து வரும் பதற்ற நிலைமை பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு எடுத்துச் சொல்லப்படவுள்ளது.

அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதியைச் சந்தித்து இதனைத் தெரிவிக்க இருக்கிறார்.

இச் சந்திப்பு இவ்வாரம் இடம்பெறும்.

அண்மையில்தான் அமைச்சர் தொண்டமான் தமிழ் நாட்டில் இருந்து திரும்பினார்.

பிரார்த்தனை இயக்கத்தை நடத்தும் அடிப்படைக் காரணத்தையும் அமைச்சர் அப்போது ஜனாதிபதியிடம் தெரிவிப்பார் என்று அறிவிக்கப்படுகின்றது (உ-எ)

## முகாமை விட்டு ஓட முயன்ற சிப்பாய்கள் மீது படையினரே சூடு!

### நாவற்குழியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 25

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து தப்பி ஓட முயன்ற சிப்பாய்கள் மீது முகாமிலிருந்த மற்றைய சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் சிப்பாய்கள் சிலர் பலியானதாகவும் மற்றும் சிலர் காயமடைந்ததாகவும் தெரிய வருகிறது.

வெள்ளிக்கிழமை இரவு பதினொரு மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

விடுமுறைக்கென லீவு கோரி வழங்கப்படாத பல சிப்பாய்களே இவ்வாறு தப்பி ஓட முயன்றதாகத் தெரியவருகிறது.

நள்ளிரவு வேளையில் அரியாலைப் பக்கமாக சிப்பாய்கள் தப்பி ஓட முயன்றபோது சென்றி நிலையில் நின்ற மற்றைய சிப்பாய்கள் இவர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் - கொழும்பு போக்குவரத்துகள் தொடர்ந்து ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே 25

ஆனையிறவுப் பகுதியில் நேற்று போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் நடந்த மோதல் காரணமாக கொழும்பு-யாழ் போக்குவரத்துச் சேவைகள் தொடர்ந்து துண்டிக்கப்பட்டன.

அண்மையில் பளையிலும், ஆனையிறவிலும் நடந்த இராணுவத் தாக்குதலினால் தடைப்பட்டிருந்த போக்குவரத்துச் சேவைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாவதாக இருந்தன. அந்த வகையில் ஒருசில பஸ்கள் நேற்றுக் காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டன.

ஆனால் நேற்று ஆனையிறவில் நிகழ்ந்த மோதல் காரணமாக அந்த பஸ்கள் இடைவழியில் யாழ்ப்பாணம் திரும்பின. (உ-10)

## ஏகாதிபத்திய சக்திகளின் தலையீடே தீர்வுக்கு முட்டுக்கட்டை

### ரஷ்ய வானொலி கருத்து

மாஸ்கோ, மே 25

ஏகாதிபத்திய சக்திகளின் தலையீடே இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது.

இப்படி ரஷ்ய வானொலி அறிவித்தது.

இலங்கை இனப் பிரச்சினை பற்றிய விமர்சனம் ஒன்றை ரஷ்ய வானொலி நேற்று தனது சேவையில் ஒலிபரப்பியது.

புதுடில்லியில் இருந்து ரஷ்ய அரசியல் விமர்சகர் இந்த விமர்சனத்தை அனுப்பியிருந்தார்.

இனப் பிரச்சினை இலங்கை அரசின் பாதுகாப்புச் செலவினத்தை பலமடங்காக அதிகரித்துள்ளது.

அணிசேரா நாடான இலங்கை தனது ஆயுதபலத்தை அதிகரிக்க ஏகாதிபத்திய நாடுகளில் தங்கியுள்ளது. இதனால் தான் உள்செலவுகள் அங்கு அதிகரித்து வருகின்றன.

அமெரிக்காவும் அதன் நட்புநாடுகளான பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் மேல்நாடுகள் கவிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சியாமிஸ் இரட்டையர் பிரிக்கப்பட்டனர்!

### பிரிட்டனில் அதிசயம்

லண்டன், மே 25

ஒட்டிப்பிறந்த இரு பிள்ளைகள் (சியாமிஸ் இரட்டையர்கள்) 12 மணிநேர தீவிர சத்திர சிகிச்சையின் பின் இரண்டு குழந்தைகளாகப் பிரிக்கப்பட்டனர்.

இந்த அதிசய சத்திரசிகிச்சை பிரிட்டனில் நடைபெற்றுள்ளது.

சூடானைச் சேர்ந்த இந்த இரு குழந்தைகளுக்கும் ஒரே ஈரலும், குடற்தொகுதியுமே காணப்பட்டபோதிலும் இருவருக்கும் தனித்தனியாக இரண்டு இருதயங்கள் இருந்ததால்தான் இவர்களை இரண்டாகப் பிரிக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலை நிறுத்த மீண்டும் இந்தியா வலியுறுத்து!

கொழும்பு, மே 25

யாழ் குடாநாட்டில் தமிழ்ப் போராளிகள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்தும்படி இந்தியா இலங்கை அரசாங்கத்தை மீண்டும் கேட்டுள்ளது.

கொழும்பில் இந்தியத் தூதர் அலுவலகப் பேச்சாளர் ஒருவரை ஆதாரம் காட்டி ஆஸ்திரேலிய வானொலி நேற்று இதனை அறிவித்தது.

## இவ்வாரம் பெரும் தாக்குதல் படையினருக்கு 'பச்சை விளக்கு'

### இராணுவ உயர் அதிகாரி தகவல்

லண்டன், மே 25

யாழ்ப்பாணம் மீதான இராணுவத் தாக்குதலை இந்த வாரத்தில் மேலும் தீவிரமாகத் தொடருவதற்கு இலங்கை அரசாங்கம் ஆயுதப்படைகளுக்கு 'பச்சை விளக்கு' காட்டியுள்ளது.

கொழும்பில் உள்ள இராணுவ உயரதிகாரி ஒருவர் இத் தகவலை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தெரிவித்ததாக வெளிநாட்டு வானொலி ஒன்று நேற்றிரவு அறிவித்தது.

வானொலிச் செய்தியின் பிரகாரம் —

* வானத் தாக்குதல்களை நடத்துவதற்கு மேலதிகமாக விமானங்கள் வடக்கே அனுப்பப்பட்டுள்ளன,
* மேலதிகத் துருப்புக்களும் அங்கே விரைந்துள்ளன,
* தரைத் தாக்குதல்களை நடத்தி இராணுவம் முன்னேறும்போது விமானங்கள் படையினருக்குப் பாதுகாப்பு வழங்கும்,
* குடாநாட்டைச் சுற்றியுள்ள கடற்பிராந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிந்திய செய்தி

## ராஜீவ் நேற்று அறிவிப்பு

வடக்கில் - தமிழ் மக்கள் மீதான இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்திருக்கிறார்.

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பெர்னாண்டோ திசநாயக்கவை அழைத்து ராஜீவ் காந்தி இந்த அறிவிப்பை விடுத்ததாக அவுஸ்திரேலிய வானொலி நேற்று நள்ளிரவு அறிவித்தது. (உ)

## புகைவைக் காகிதத்தில் ரூபாநோட்டு

கொழும்பு, மே 25

இலங்கையில் ரூபா நோட்டுக்கள் புகைவைத் தன்மை வாய்ந்த காகிதத்தில் அச்சிடப்படவுள்ளன.

ரூபா நோட்டுக்கள் விரைவில் கிழிவதைத் தடுக்கும் முகமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

முதல் கட்டமாக ஆயிரம் ரூபா நோட்டுக்கள் இக்கடதாசியில் அச்சிடப்படும். (உ-7)

## இந்திய உடன்பாட்டுடன் புலிகள் மீது தாக்குதலா?

### செய்தி சுத்தஅபத்தம் என்கிறது இந்தியா

கொழும்பு, மே 25

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தாக்குதலை இந்திய அரசின் உடன்பாட்டுடன் தான் இலங்கை அரசு நடத்துகின்றது என கொழும்பு அரசுப் பத்திரிகை வெளியிட்ட செய்தி சுத்த அபத்தம் என்கிறது இந்தியா.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் இது சம்பந்தமாக விடுத்த அறிக்கை வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான இராணுவத் தாக்குதலை இந்திய அரசின் உடன்பாட்டுடன் தான் இலங்கை அரசு மேற்கொள்வதாக இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இச் செய்தி விஷமத்தனமானதும் திசை திருப்புவதுமாகும்.

இராணுவத் தீர்வு

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

25-05-1987

திங்கட்கிழமை

சுபநேரம்:-

11-53 முதல் 1-23 வரை

ராகுகாலம்:-

7-23 முதல் 8-53 வரை

இன்று பகலும் இரவும் பொருந்தும் பிரதோஷ விரதம்

## மிருசுவிலில் நேற்று வானைத் துரத்திய ஹெலி தேவாலயத்தில் நின்றோர்மீது சூடு!

யாழ்ப்பாணம், மே 25

பயணிகள் வானைத் துரத்தி வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று வான் தேவாலயம் ஒன்றினுள் தஞ்சம் அடைந்ததைத் தொடர்ந்து அங்கு நின்றோர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இதனால் பெண்கள் உட்பட பலர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை மிருசுவிலில் இச் சம்பவம் நடைபெற்றது.

ஆனையிறவு பக்கமாகச் சென்ற பயணிகள் வான் ஒன்று தொடர்ந்து மேலே செல்ல முடியாத நிலையில் யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிவந்து கொண்டிருந்தது.

மிருசுவிலுக்கு அருகில் பயணிகள் வான் வந்து கொண்டிருந்தபோது திடீரென வந்த ஹெலிக்கொப்டர் அதனை நோக்கித் தாக்குதல் நடத்தியது.

இதனையடுத்து சாரதி வானை அதி வேகமாகச் செலுத்தி தேவாலயம் ஒன்றினுள் கொண்டு சென்றார்.

வானைத் துரத்தி வந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குத் தமிழர் பக்கம் மலையக இளைஞர்கள் சாய்வது ஏன்?

### தொண்டமான் விளக்கம்

கொழும்பு, மே 25

மலையக இளைஞர்கள் யாழ்ப்பாணம் வாழ் தமிழர் பக்கம் சாய்வது ஏன்? அவர்கள் விடயத்தில் உணர்ச்சி வசப்படுவது ஏன்?

அமைச்சர் தொண்டமான் இதற்கு விளக்கம் அளித்திருக்கிறார்.

கொழும்புச் செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியிலே அமைச்சர் இவ்விளக்கத்தை இக் கருத்தை வெளியிட்டார்.

மலையகத்தில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் மத்தியில் தீவிரவாதம் புகுவதாகக் கூறப்படுவது பற்றி கருத்துக் கேட்டபோது அமைச்சர் தொண்டமான் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் வாழ் தமிழருடன் ஏதாவது ஒருவகையான இணைப்பு மலையக இளைஞருக்கு உண்டு. அதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் சம்பவங்களைக் கேள்விப்பட்டு அவர்கள் உணர்ச்சி வசப்படுகின்றார்கள்.

வேலையற்ற பெரும்பாலான இளைஞர்கள் பிரசாவுரிமையற்றவர்கள். தங்களுக்காக ஒன்றுமே செய்யப்படவில்லை என்று அவர்கள் உணர்கின்றனர்.

அவர்களுக்கு என்று நாடோ ஒன்றுமே இல்லை. பக்கம் இல்லை.

அரசு அபிவிருத்தித் திட்டங்களின் பலன்களை மலையகத் தமிழர் அடைய முடியவில்லை.

இதன் காரணமாக

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் கல்வி வட்டாரத்தில் 7 பாடசாலைகள் இடம்மாற்றம்

## நடேஸ்வரா மகாஜனாவில் இயங்கும்

யாழ்ப்பாணம், மே 25

பாதுகாப்புக் கருதி காங்கேசன்துறை கல்வி வட்டாரப் பாடசாலைகள் இடம்பெயர்கின்றன.

புதிய இடங்களில் இப் பாடசாலைகள் இன்று திங்கள் முதல் இயங்கத் தொடங்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடந்த வலிகாமக் கிழக்கு கல்விப் பணிப்பாளரால் கூட்டப்பட்ட அதிபர்கள் மாநாட்டில் இது சம்பந்தமான தீர்மானம் எடுக்கப்பட்டது.

"இங்கே முதல் இடம் மாற்றம் ஏழுவருகின்றது. இப் பாடசாலைகள் வழமை நேரப் பாடசாலைகளாகவே இயங்கும். சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் புதிய இடங்களுக்குச் செல்ல வேண்டும்."

— இப்படி யாழ் வட்டாரக் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் சேட்டிருக்கின்றார்.

காங்கேசன்துறை மகா வித்தியாலயம் காங்கேசன்துறை விசாலாட்சி வித்தியாலயத்திலும்--

காங்கேசன்துறை றோ. க. த. க. பாடசாலை, மாவிட்டபுரம் வடக்கு அ. மி. த. க. பாடசாலையிலும் --

நடேஸ்வராக் கனிஷ்ட வித்தியாசாலை, மாவிட்டபுரம் அ. மி. த. க. பாடசாலையிலும் --

ஊறணி கனிஷ்ட வித்தியாசாலை, தையிட்டி சிறு வித்தியாசாலைக்கு அருகில் உள்ள நூலகத்திலும் ---

மயிலிட்டி கலைமகள் வித்தியாசாலை, சீனன் கலட்டி ஞானோதய வித்தியாசாலையிலும் —

நடேஸ்வராக் கல்லூரி, மகாஜனக் கல்லூரியிலும் —

தையிட்டி கணேச வித்தியாசாலை, தையிட்டி சிவகுருநாத வித்தியாசாலையிலும் இயங்கும்.

ஏற்கனவே மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை, தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியிலும், குரும்பசிட்டி பொன் பரமானந்த வித்தியாசாலை, குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாசாலையிலும்—

பலாலி சித்திவிநாயகர் வித்தியாசாலை பலாலி வெங்காயச் சங்கக் கட்டடத்திலும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## மூதாட்டியின் சங்கிலி அபேஸ்

பண்டத்தரிப்பு, மே 25

இல்லாலை சந்திரமாதா கோவிலுக்குச் சென்ற 65 வயது மூதாட்டி ஒருவரின் 3½ பவுண் சங்கிலி அறிப்பறி செய்யப்பட்டது.

முன்னாள் பொலிஸ் சார்ஜன்ட் கபிரியேல் பிள்ளையின் மனைவியான இப்பெண் கோவிலுக்குச் சென்றபோது அவர் பின்னால் சைக்கிளில் வந்த இனம் தெரியாத வாலிபர் ஒருவர் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடினார்.

ஆட்கள் துரத்தியும் ஆளைப் பிடிக்க முடியவில்லை. (இ-120)

## அதிரடிப் பொலிஸை மரணப் படையாக மாற்றும் கூலிப்படைகள்

வாஷிங்டன், மே 25

பிரிட்டிஷ் கூலிப்படையினர் இலங்கை விசேட அதிரடிப் பொலிஸ் படையை மரணப் படையாக மாற்றி வருகின்றனர்.

இப்படிக் குற்றஞ்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதாக 'வாஷிங்டன் டைம்ஸ்' நாளிதழ் செய்தி வெளியிட்டது.

மேற்கு நாட்டு இராஜதந்திரிகளை ஆதாரங்காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

அதிரடிப் படையினர் தமிழர்களை பீதியடையச் செய்கின்றனர். அநேக படுகொலைகளுக்குக் காரணமாகவும் அதிரடிப் பொலிஸ் படையே உள்ளது.

அமெரிக்க ஹெலிக்கொப்டர்களைச் செலுத்தும் பயிற்சியை இலங்கையருக்கு பிரிட்டிஷ் கூலிப்படையினர் அளிக்கின்றனர். இருந்தும் போர் நடவடிக்கைகளிலும் கூலிப்படையினர் ஈடுபடுகின்றனர்.

தலைமை விமானியாக இலங்கையர் இருந்தாலும் துணை விமானி ஆசனத்தில் கூலிப்படையினர் தான் இருப்பார்.

தரையில் இருந்து தாக்குதல் நடத்தப்படும் போது, ஹெலிக்கொப்டரை ஓட்டும் பொறுப்பை கூலிப்படை விமானி ஏற்றுக் கொள்கிறார்.

எதிரியின் தாக்குதலில் இருந்து தப்பிச் செல்வதில் கூடுதல் அனுபவம் கொண்டவர் என்பதால் கூலிப்படை விமானியிடம் ஹெலிக்கொப்டரின் கட்டுப்பாடு கொடுக்கப்படுகின்றது

இப்படி 'வாஷிங்டன் டைம்ஸ்' செய்தி கூறுகிறது (இ-எ)

## மற்றும் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 24

வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் காயமடைந்த இராஜகுலேந்திரன் முத்தையா சனியன்று மரணமானார்.

அச்சுவேலி உதிரிப்பாவைச் சேர்ந்த இவருக்கு வயது 41.

ஏற்கனவே இச்சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவரின் மரண விசாரணையை யாழ் மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேவன் நடத்தினார். (உ-10)

JAFFNA COLLEGE
INSTITUTE OF TECHNOLOGY
Vaddukoddai

கல்வி ஆண்டு 87/88
புதிய வகுப்புகள் 1-7-87 இல் ஆரம்பமாகின்றன
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதி 31-5-87

Diploma Course (1 வருடம்)
I Computer Programming and Data Processing
கொம்பியூட்டர் பயிற்சியும் தரவு நெறிப்படுத்தலும்
Module I Basic கட்டணம் ரூபா 2000/-
Module II Cobol கட்டணம் ரூபா 2000/-
கணிதபாடத்தில் திறமை சித்தியுடன் G C E. (சா.) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
21 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பப்படிவம் ரூபா 5/- காரியாலயத்தில் பெற்று 31-5-87க்கு முன் விண்ணப்பிக்கவும்.

— Director

## நீத்தார் பட்டியல்

### திரு. M. P. சிவநாதன்

திரு M. P. சிவநாதன் (பார்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) காலமாகிவிட்டார். இவர் ஞானபுஸ்பத்தின் (குணமணி) அன்புக்கணவரும், ஷெறினின் (திருக்குடும்பக் கன்னியர்மடம்) தகப்பனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 25-5-87 திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். தயவு செய்து இவ் அறிவித்தலை உற்றார் உறவினரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி ஞா. சிவநாதன்
54/8, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (1838)

## புரிந்துணர்வுடன் வாழ்வதே இல்லறம்

### குடும்பநல கருத்தரங்கில் உரை

மானிப்பாய், மே 25

அன்பு, பாசம், புரிந்துணர்வு ஆகியவற்றுடன் இணைந்து வாழ்வது தான் இல்லறம். திருமணம் என்பது வெறும் உடல் உறவுகளுக்காக மட்டும் செய்துகொள்வதல்ல. வாழ்க்கையின் இன்பதுன்பங்களை பரஸ்பரம் கணவன் மனைவி பகிர்ந்துகொண்டு வாழ்க்கை நடத்துவதாலேயே பூரண வாழ்வை அடையலாம்.

ஆனைக்கோட்டை குடும்பநல உத்தியோகத்தர் திரு. மேரி ஜோசெப் இவ்வாறு கூறினார்.

"குடும்ப நல காரமும் வாழ்வும்" பற்றிய கருத்தரங்கு ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்கு வணபிதா ஜீவா-யோசெப் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமை உரையில் கிறிஸ்துவின் தூய அன்பினை பெற்றுள்ள நாம் அவரைப் போல ஏனைய உயிர்களிடத்தும் அன்பினைச் செலுத்தவேண்டும் என்றார்.

எல்லோரினதும் இன்ப துன்பங்களிலும் எமக்கும் பங்குண்டு என்ற நினைவில் சகல ஜீவராசிகளுடனும் பழகவேண்டும் என்றும் அவர் கூறினார். (உ-90)

## மலசல கூடமின்றி மக்கள் அவதி

கொடிகாமம், மே 25

கொடிகாமம் சந்தைப் பகுதியில் பொது மலசல கூடம் இல்லாததால் பொதுமக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகின்றனர்.

சந்தைப்பகுதிக்கு அண்மையில் கச்சாய் வீதியில் உள்ள ஒரு மலசல கூடம் பலகாலமாக சுத்திகரிக்கப்படாமல் துர்நாற்றத்துடன் பாவனைக்குதவாததாக உள்ளது

இந்த மலசல கூடத்தைத் துப்பரவு செய்து அதனை மூடியுள்ள செடி, கொடி, பற்றைகளை அகற்ற வேண்டுமென்று பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டியுள்ளனர். (உ-ஏ-75)

## உள்ளூர் வளங்களிலிருந்து சிறு கைத்தொழில்களைப் பெருக்க வேண்டும்

கொடிகாமம், மே 25

கிராமங்களின் மூலப் பொருள்களான பனை, தென்னை வளங்களில் இருந்து சிறு கைத்தொழில் உற்பத்திகளை நாம் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

— இவ்வாறு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. டி. சுந்தரம்பிள்ளை குறிப்பிட்டார்.

தென்மராட்சி கிழக்குப் பகுதிகளின் கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர்கள், செயலாளர்களுக்கான கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிராம அபிவிருத்திச் சபைகளின் செயற்பாடுகள் பற்றி ஆலோசிக்கவே இக் கருத்தரங்கு நடத்தப்பட்டது

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் சுந்தரம்பிள்ளை மேலும் பேசுகையில்---

எதிர்கால சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் பயன்தரும் மரங்களை நாம் நாட்டவேண்டும்.

கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு என்பவற்றை கிராம மக்களிடம் ஊக்குவிக்க கிராம அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் முயல வேண்டும் என்றார்.

திரு. ஆர். மாராச[illegible]ரம், திரு. ஐ. இக்கையா, திரு. அ. திருநாவுக்கரசு ஆகியோரும் உரையாற்றினர். (உ-ஏ-75)

## இளம் தமிழ் தம்பதியர் கைது

கொழும்பு, மே 25

தம்புள்ள பகுதியில் உள்ள தடை முகாம் ஒன்றில் ஓர் இளம் தமிழ்த் தம்பதியை பொலிஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

தீவிரவாதச் சம்பந்தமான தஸ்தாவேஜுகள், வடிகள் அத்தம்பதியினரிடம் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ-எ)

## 11வயதுச் சிறுவன் தற்கொலை

பண்டத்தரிப்பு, மே25

தம்பியுடன் சண்டை பிடித்த 11 வயதுச் சிறுவன் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்தார்.

இந்த சம்பவம் ஏழாலை வடக்கில் இடம் பெற்றது.

சம்பவதினம் அண்ணனும் தம்பியும் சண்டை பிடித்தனர் தாய் இருவரையும் அழைத்து சமாதானம் செய்து வைத்தாராம். பின்பு தலைமறைவான 11 வயதுச் சிறுவன் கிருமிநாசினி [illegible] (இ-120)



# ஷப்ரு

யுனிகோ பிநன்ஸ் லிமிடட்

## யாழ் அலுவலகம்

## இடம் மாற்றம்


அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

உங்கள் நலன் கருதி "ஷப்ரு" நிதி நிறுவன அலுவலகத்தைப் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றியுள்ளோம்.

நீங்கள் குடாநாட்டின் எந்தப்பாகத்திலிருந்து வருபவர்களாயிருந்தாலும் சரி எமது புதிய அலுவலகத்திற்கு சிரமமின்றிப் பாதுகாப்பாகத் தயக்கமின்றி வந்துபோகலாம்.

ஆம், எமது அலுவலகம் நகரின் மத்தியில் பலாலி வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்தில் நாவலர் வீதி, 230 ஆம் இலக்கக் கட்டடத்துக்கு இடம் மாற்றப்பட்டு உள்ளது.

கீழே உள்ள வரைபடத்தைப் பார்த்து நீங்கள் எங்கள் புதிய அலுவலகத்திற்கு இலகுவாக வரலாம்.




1. மானிப்பாய் வீதி மூலம் யாழ் நகர் வரும் வாடிக்கையாளர்கள் ஐந்து சந்தியில் இறங்கி நாவலர் வீதி ஊடாகவும் --
2. காங்கேசன்துறை வீதி ஊடாக யாழ் நகர் வரும் வாடிக்கையாளர்கள் மனோகராச் சந்தியில் இறங்கி நாவலர் வீதி ஊடாகவும்—
3. பலாலி வீதி மூலம் நகருக்கு வரும் வாடிக்கையாளர்கள் பலாலி வீதி — நாவலர் வீதி இலுப்பையடிச் சந்தியில் இறங்கியும் -
4. பருத்தித்துறை வீதி மூலம் யாழ் நகருக்கு வருவோர் ஆனைப்பந்தி ஊடாகவும்—
5. பிரதான வீதி மூலம் யாழ் நகர் வரும் வாடிக்கையாளர்கள் ஆரிய குளத்திலிருந்து பலாலி வீதி ஊடாகவும்—

புதிய அலுவலகத்துக்கு இலகுவாக வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

